RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s738

OPEN ACCESS

# பன்முகப் பார்வையில் வரதராசனாரின் அகல்விளக்கு

**வெ. நிர்மலா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அரசினர் கலைக்கல்லூரி, திருத்தணி-631209, தமிழ்நாடு, இந்தியா.

# Multifaceted Perspective Varatharasan's Akal Vilakku

**V. Nirmala** [a, *]

[a] Department of Tamil, Arulmigu Sri Subramaniya Swamy Governmnet Arts College, Thiruttani-631209, Tamil Nadu, India

* Corresponding Author: vnirmalassgac65@gmail.com

Received: 10-12-2021
Revised: 17-04-2022
Accepted: 03-05-2022
Published: 30-07-2022

**ABSTRACT**

Dr. M. Varadarasanar's role in the development of the Tamil language in the twentieth century is outstanding. He started as a government official and rose to become a university vice-chancellor and became a socially conscious writer. He has written many books in various fields like criticism, prose, linguistics, and novel. He has written about thirteen novels in the way of solving many social problems. Dr. Mu.va. creates the scenes they see every day with a sense of literature in their works, so the social background is the basis for the creation. Man does not have the nature to live alone. He lives with many people. A group of people living together in a particular place is called a community. The creator is a member of the community. His work is supported by a distinguished community. The success or failure of modern literature is determined by the social impact it has. Therefore, we can know from the works of Mu.Va. that society and literature are interdependent

**Keywords:** M. Varadarasanar, Akal Vilakku, Mu.va, Community

## முன்னுரை

மு. வரதராசனார் அவர்களின் சிந்தனையில் அரும்பி முகிழ்ந்து மலர்ந்து மணம் பரப்பிய கொள்கைகள் பலப்பல பழப்பெருமையை ஒன்றையே பேசுவதில் பயனில்லை. புதிய நிலைக்கு ஏற்றவாறு வாழும் வல்லமை பெற வேண்டும் என்று இவர் விரும்பினார். அவற்றை தமது நாவல்களிலும் குறிப்பிட்டுள்ளார். நாவல் என்பது பொழுது போக்குவதற்கு மட்டும் பயன்பட்டால் போதாது. அது சிந்தனையைத் தூண்டி வாழ்க்கைக்கும் பயன்பட வேண்டும் என்று விரும்பினார். சமுதாய குறைகளைக் பண்போடு சுட்டிக்காட்டி, நீக்கச் செய்து திருத்தும் ஆற்றல் பெற்றவை இவரது ‘அகல்விளக்கு’ என்னும் நாவல். சாதாரண மனிதனின் எளிமையான வாழ்க்கையை அடித்தளமாக கொண்டு தோன்றும் புதினம் சிறந்ததாக அமையும் என்பதற்கு படைப்புகளை உதாரணமாக கொள்ளலாம் (Varatharasan, 2004).

மு.வ. அவர்களின் நாவலில் விறுவிறுப்பு ஏற்பட வேண்டும் என்பதற்காக நடைபெற முடியாத, இயற்கை இறந்த நிகழ்ச்சிகளையோ, கொலை, கொள்ளை நிகழ்ச்சிகளையோ நாவலில் எப்பொழுதும் அமைப்பதில்லை. சமுதாயத்தில் காணப்படுகின்றன குறைகளை போக்குவதற்காக அறிவுரைகளையே நாவல் வளர்ச்சிகளில் இடம்பெற செய்து நாவல்களை இலக்கிய அறிவுரை பெட்டகங்களாக தந்துள்ளார். அவரின் நாவல்களில் ‘அகல்விளக்கு’ நாவல் பல அறிய கருத்துக்களை தருகிறது எனலாம்.

இடையிடையே பாத்திரங்களின் மூலமாக ஆசிரியர் கூறும் அறிவுரைகள் பல இடம் பெற்றிருக்கின்றன எனலாம். ஒவ்வொரு பக்கத்திலும் மு.வ. வின் சிந்தனைகள், வாழ்க்கை தத்துவங்கள் அமைந்திருக்கின்றன. மு.வ. அவர்களின் பதின்மூன்று நாவல்களில் அகல்விளக்கு சாகித்ய அகாடாமி பரிசு பெற்றதாகும். இரண்டு இளைய உள்ளங்களில் மாறுபட்ட வாழ்க்கையை சித்தரிக்கின்ற இந்த நாவல் மு.வ. வின் அனுபவ முத்திரைகளையும், சிந்தனை வளங்களையும் உயரிய எதிர்பார்ப்புகளையும் வெளிப்படுத்துகின்ற நாவல் ஆகும். இந்நாவலால் அறியப்படுகின்ற மு.வ. வின் பன்முகப் பார்வையினை இவ்வாய்வில் காண்போம் (Varatharasan, 2004).

மு.வ. படைத்துள்ள அகல்விளக்கு என்னும் நாவல் மக்களின் அன்றாட வாழ்வை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டவை. சமுதாய நாவலாசிரியரான இவரது படைப்புகளில் இடம்பெறும் பாத்திர உருவாக்கம், பாத்திரங்களுக்குப் பெயரிடல், நடை, வருணனை, இலக்கியக் கருத்துக்கள் முதலானவற்றில் தனித்திறமைகள் வெளிப்படுகின்றன. மு.வ.வின் நெஞ்சம் தமிழ்நாட்டுக் குடும்பங்களைக் காணும்போதெல்லாம் ஒருவகை இரக்க உணர்வையும், குடும்ப அமைப்பைத் திருத்த பாடுபட வேண்டும் என்ற ஓர் சமுதாய உணர்வையும் கொண்டுள்ளதைக் காணமுடிகிறது. அதனால்தான் அவருடைய படைப்புகளில் வாழ்வியல் அறங்களை மிகுதியும் வகுத்துச் செல்கிறார். இவரின் படைப்புகளுள் ‘அகல்விளக்கு’ சாகித்ய அகாதமியின் பரிசினைப் பெற்றதோடு பிற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட நாவல் ஆகும். இவ்ஆய்வு அகல்விளக்கு நாவலின் வழி மு.வ.வின் சமூகக் கருத்துக்களை ஆராய்கின்றன (Varatharasan, 2004).

## அகல் விளக்கு - விளக்கம்

‘அகல்விளக்கு’ நாவல் முழுமையும் அகல்விளக்கு என்ற பழமையான விளக்கு இடம் பெறவில்லை. மேலும் நாவலின் வளர்ச்சிக்கோ நாவலின் கட்டமைப்புக்கோ நாவலின் கருப்பொருளுக்கோ இந்த அகல் விளக்குத் துணைபுரியவில்லை. ஆனால் நாவலில் இடம்பெற்ற பாத்திரங்களின் குணங்களை விவரிப்பதற்காக, ஒப்புமை காட்டப்படுவதற்காக ஒரே இடத்தில் மட்டும் இந்த அகல்விளக்குப் பயன்படுத்தப்படுகிறது. இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால் நாவல் முழுமையும் இடம் பெற்றிருக்கிற பாத்திரம் நாவலின் இறுதியில் பெருமைப்படுத்திப் பேசப்படும்பொழுது மட்டுமே இந்த அவல்விளக்குப் பயன்படுத்தப்பட்டு நாவலுக்கே தலைப்பாக அமைகிறது. ஆம். வேலய்யன் என்ற பாத்திரத்தின் பெருமையை விளக்கும்பொழுது அந்த அகல் விளக்கு மற்றொரு பாத்திரமான சந்திரன் மூலமாகக் கூறப்படுகிறது (Varatharasan, 2004).

## கதைக்கரு

ஒவ்வொரு புதினத்திற்கும் கதைக்கரு ஒன்று வேண்டும். அது முட்டையில் உள்ள கருவினைப் போலவும் உடலுக்குள்ளமைந்த எலும்புக்கூடு போலவும் புதினத்திற்கு அடிப்படையாய் ஆதாரமாய் விளங்கும் என்பர் திறனாய்வாளர்கள். அதை மையமாகக் கொண்டே கதை பின்னப்படும். அங்ஙனம் பார்க்கும்போது ‘நேர்மை உயரும் தீமை அழியும்’ எனும் அடிப்படைக் கருத்தே அகல்விளக்கின் கருவாய் அமைந்துள்ளதெனலாம் (Varatharasan, 2004).

எடுத்துக்கொண்ட கருவினை விளக்கும் வகையில் கதை நிகழ்ச்சிகள் பின்னப்படும். அவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாய்ப் படிப்போர் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் விறுவிறுப்பு அமைந்ததாய், ஒருமைப்பாடும், முழுமையுமே கொண்டு அமைய வேண்டும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் நம்பத்தகுந்ததாய்க் கதைக்குப் பயன்படுவதாய் அமைதல் வேண்டும் என விளக்குவர். அம்முறையில் காணும்போது அகல்விளக்கில் உள்ள நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந்துள்ளன (Dhandayudham, 1973).

## கதைப்பின்னல்

சந்திரன், வேலய்யன், மாலன் எனும் மூவரது வாழ்க்கை நிகழ்ச்சிகளே கதையாக உருப்பெறுகின்றன. அறிவும் அழகும் சுறுசுறுப்பும் கொண்ட சந்திரன் கல்லூரி வாழ்வில் இமாவதி

எனும் பெண்ணோடு பழக நேர்கிறது. அவளது நட்பினைக் காதலெனக் கருதிய சந்திரன் அவளது மணமடலைக் கண்டதும் ஏமாற்றமடைந்து நெறிமாறிச் செல்கிறான். தன் மனைவியோடு சரியாக வாழத் தெரியாமல் அவளது இறப்புக்குக் காரணமாகிறான். இறுதியில் தொழுநோய்க்கு ஆளாகி இறக்கிறான்.

சராசரி அறிவும் சாதாரண அழகும் கொண்ட வேலய்யன் நேர்மை உள்ளத்துடன் படிப்படியே கல்வியில் உயர்ந்து நல்ல பணி ஏற்று வாழ்வில் உயர்கிறான். மாலன் குறுக்கு வழியில் உயர்ந்துவிடலாம் என்று மூடநம்பிக்கை கொண்டு உயர முற்படுகிறான். அதனால் தீமையே பயனாக வந்தடையக் கண்டு திருந்தி வாழ்கிறான் (Varatharasan, 2004).

## கதை கூறும் முறை

புதினத்தில் கதை கூறும் முறை கவனித்தற்குரியதாகும் (Varatharasan, 2004). கதை மாந்தரே கதை கூறுதல், ஆசிரியர் கதை கூறுதல், கடிதங்கள் வாயிலாகக் கதை கூறுதல், நாட்குறிப்பு வாயிலாகக் கதை கூறுதல் எனப் பலமுறையில் கதை கூறப்படுதல் உண்டு. அகல்விளக்கில் கதை மாந்தருள் ஒருவனான வேலய்யனே கதை கூறுகின்றான்.

## கதை மாந்தர்கள்

புதினத்தில் அடுத்துக் கருதத்தக்கது கதைமாந்தர் படைப்பாகும். குறிக்கோள் வாழ்வுடைய ஒப்பாரும் மிக்காருமில்லாத கதைமாந்தர்கள் படைக்கப்படுவதுண்டு. குறிஞ்சிமலரில் வரும் பூரணி, பொன்விலங்கில் வரும் சத்தியமூர்த்தி அத்தகையோர் நடப்பியல் வாழ்வில் உள்ள கதை மாந்தர்களைப் படைப்பதும் உண்டு. டாக்டர்.மு.வ. அவர்களது புதினங்களில் இருவகை மாந்தரும் கலந்தே காணப்படுகின்றனர். சந்திரன், வேலய்யன், மாலன் சாந்தலிங்கம், பச்சைமலை, கயற்கண்ணி, கற்பகம், மணிமேகலை, பாக்கியம், வள்ளி, இமாவதி ஆகியோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க கதை மாந்தர்கள்.

மு.வ. வின் கதை மாந்தர்கள் உலகில் காணப்படும் சராசரி மனிதர்களாகவே காணப்படுவர். தனித்தன்மை உடையவர்களாகவோ விசித்திரமான பண்புடையவர்களாகவோ படைக்கப்படுவதில்லை. நமது வாழ்வில் காணப்படும் ஒவ்வொரு பண்புக்கும் ஒவ்வொரு கதைமாந்தரைப்; படைக்கிறார். நன்மைக்கு வேலய்யன், தீமைக்குச் சந்திரன், குறுக்கு வழிக்கு மாலன், எளிமைக்கு ஆசிரியர், தொண்டுக்குப் பாக்கியம் என்று இங்ஙனம் அமைத்துள்ளார் (Varatharasan, 2004).

## உரையாடல்கள்

உரையாடல்கள் எளிய தமிழில் அமைந்திருக்கின்றன. உரையாடல்களைப் பொறுத்தவரை கதைமாந்தர் இயல்புக்கேற்ப அவர்கள் பேசுவதையே காட்டுதல் வேண்டுமென்பது ஒரு சாரார் கருத்து. சென்னை வாழ் ரிக்ஷாக்காரர் தமிழ், அந்தணர் தமிழ், கலப்படத் தமிழ், என்று கொச்சை மொழிகளை அப்படியே கையாண்டு புதினம் படைப்பார் திரு. ஜெயகாந்தன். ஆயின் செந்தமிழையும் ஆளாமல் அளவான எளிய தமிழ் உரையாடலையே பயன்படுத்துகிறார் மு.வ. வரணும் வேண்டாம்பா, வாங்க, இறங்குங்க போன்ற கொச்சை மொழிகள் பயிலக் காணலாம் (Varatharasan, 2004).

## வருணனை

பின்புல வருணனை அதிகம் காணப்படவில்லை. கதை நிகழும் இடமாக வாலாசப்பேட்டை, பெருங்குறிஞ்சி, குண்டலேரி, வேடம் முதலிய சென்னைக்குரிய இடங்களே அமைந்துள்ளன. பார்த்தசாரதியுடைய நாவல்களில் மதுரை மணத்தையும், சண்முக சுந்தரத்தின் நாவல்களில் கொங்கு நாட்டு மணத்தையும் உணரமுடியும். அதுபோல் மு.வ.நாவல்களில் சென்னை நகர்ப்புறப் பின்னணியையே காணமுடியும். ஆசிரியர் தான் வாழும் பகுதியையே எளிமையாகக் கதையின் பின்னணியாக்குகிறார் (Varatharasan, 2004).

## முரண்பாடு

சந்திரனையும் வேலய்யனையும் ஆசிரியர் முரண்பட்ட நிலையில் படைக்கின்றார். அரளியையும் தாழையையும் விளக்கிய ஆசிரியர் மனிதரிலும் 'தாழைபோல் அரளிபோல்' சிலர் உள்ளனர் என்ற உண்மையை விளக்குகிறார். சந்திரனுடைய அறிவும் அழகும் தவிர அவனுடைய வாழ்க்கையில் நல்லவை வேறில்லை என்று சந்திரனோடு ஒப்பிடுவார். அவ்வாறே துளசியினை விளக்கி வேலய்யன் நிலையோடு நம்மை ஒப்பிட்டு உணர வைப்பார், 'நீ மண் அகலாக இருந்த காலத்தில் நான் பித்தளை அகலாக இருந்தேன். சிறிதுகாலம் பளபள என்று மின்னினேன். என் அழகையும் அறிவையும் அப்போது எல்லோரும் விரும்பினார்கள்; பாராட்டினார்கள். என்ன பயன்? வலவல எண்ணெயும் கெட்டது, திரியும் கெட்டது, சிட்டமும் பிடித்தது. ஒளி மங்கியது. மங்கிவிட்டேன். நீதான் நேராகச் சுடர்விட்டு அமைதியாக எரியும் ஒளிவிளக்கு' என்று திருந்திய நிலையில் சந்திரன் பேசுவது வேலய்யனுக்கும் அவனுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குவதோடு புதினத்தின் பெயர்க் காரணத்தையும் உணரவைக்கிறது (Varatharasan, 2004).

## சமுதாயக் கருத்துக்கள்

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக்கொள்ளும் அமைப்பே சமூகம். ஒரு குழுவாகக் கூடி வாழும் மக்கள் கூட்டமே சமூகம் என்பது இதனால் பெறப்படுகிறது. சமூகம் என நாம் குறிப்பிடுகின்றபொழுது கண்ணால் காணுகின்ற கருப்பொருள் எதையும் அது குறிப்பதில்லை. நாம் காண்பதெல்லாம் சமுதாயத்தின் அங்கங்களாகத் திகழ்கின்ற தனிப்பட்ட மனிதர்களைத்தான். சமுதாயத்தைப் பற்றிப் பேசுகின்ற பொழுது தனிமனிதனை மறந்துவிடக் கூடாது. சமுதாயம் என்ற சொல் ஆறறிவு படைத்த மக்கள் மனத்துள்ளும் உணர்வற்ற அடிப்படை உணர்வில்லாத மக்கள் கூட்டம் 'சமுதாயம்' என்ற சொல்லுக்கு இலக்காகாது என்பார் (Paramasivanandam, 1978). இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமானால் ஒரே மாதிரியான கொள்கையையும் நம்பிக்கையையும் கொண்டு செயல்படுகின்ற மக்களின் தொகுப்பே சமுதாயம் என அழைக்கப்படுகிறது. அத்தகைய சமுதாயம் பெரிய அளவில் விரிந்து பரந்து விளங்குகின்றது. அது நிரந்தரத் தன்மை கொண்டது. தன் காலில் தானே நிற்கும் சுயசார்புடையது. தன்னைத்தானே உருவாக்கித் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ளும் தன்மையும் கொண்டது என்று கூறுகிறார் ஸ்பென்சர்.

தனிமனிதன் தனக்கெனச் சில விதிமுறைகளை, கட்டுப்பாடுகளை வைத்துக்கொள்ளலாமே தவிர அவன் சமுதாயத்தின் உறுப்பினன். தனிமரம் தோப்பாவதில்லை. மனிதன் ஒரு சமுதாய விலங்கு என்று கூறப்பெறுவது கருதத்தக்கது. வள்ளுவரும் ஒருவனுடைய கல்வியைப் பேசும்போது அவனது கல்வி சமுதாயத்தை ஒட்டியதாக, உதந்ததாக அமையாது போனால் பலனில்லை என்கிறார்.

ஒரு சமுதாயம் வாழ்ந்த வாழ்வினைக் காணவும் மேற்கொண்ட லட்சியத்தை அறியவும் பழகிவந்த பண்பாட்டையும் நாகரிகத்தையும் தெளியவும் அவர்களிடையே நெடுங்காலமாக வளர்ந்துள்ள இலக்கியமும் கலைகளுமே பெரிதும் துணையாவன என்று கூறுகின்றார் (Thirunavukkarasu, 1984). ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் சமுதாயம் எவ்வாறு இருந்தது என்பதை அறிவதற்கு இலக்கியங்களே துணைபுரிகின்றன. அந்நிலையில் தன் நாவல்களில் சமுதாயத்திற்கு "மு.வ. கூறும் அறங்களே சமூக அறங்களாகும். மு.வ. வின் நாவல்களையும் சமுதாயத்தையும் பிரித்துப் பார்க்கவே இயலாது. மிக மேலான அறிவு நிலையில் நிற்கும் சான்றோராயினும் சமுதாயத்தை எவ்வளவு கூர்ந்த விழிகளோடு இவர் நோக்குகிறார் என்பதை இவருடைய நாவல்களே தெளிவாகக் காட்டும்" என்று இரா. தண்டாயுதம் குறிப்பிடுகின்றார்6. மூடநம்பிக்கை, பொருள், தொழில், உழைப்பு, வறுமை, சாதி, கற்பு, ஒழுக்கம், பக்தி, தொண்டு ஆகியவற்றைச் சமுதாய அறங்களாகக் கூறலாம்.

'அகல்விளக்கு' நாவலில் விதவையான பாக்கியம் அம்மையார் நாலு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தும் நல்ல புத்தகங்களைப் படித்தும் மனதைப் பக்குவப்படுத்திக் கொண்டு நல்ல அறிவுரைகளை மற்றவர்களுக்குச் சொல்வதை, உழைக்கும் பழக்கமும் தொண்டு மனமும் இருந்தால்

எப்படியும் வாழ முடியும் என்பதை அந்த அம்மையாரின் வாழ்க்கை தெளிவாக்கியது7. என்று வேலய்யன் கூறுகிறான்.

மனித சமுதாயம் எப்படி அமைய வேண்டும் என்பதை மக்கள் கற்பதற்காகவே, இயற்கை தேன்கூட்டைப் படைத்திருக்கிறது. அதில் உழைப்பவை, காவல் காப்பவை, இனம் வளர்ப்பவை, தலைவி எனப் பலவகை அமைந்திருப்பதைக் காணலாம். இப்படிப் பலவகையாகப் பிரிந்து ஒவ்வொரு வகையும் ஒவ்வொரு தொண்டு செய்தால் எல்லாம் ஒழுங்காக நடைபெறுகின்றன. அல்லாமல் எல்லாத் தேனீக்களும் சமம், எதுவும் எதையும் செய்யலாம் என்று இருந்தால் தேன்கூடு என்ற ஒன்று அமைய முடியுமா? இப்படிப்பட்ட நாகரிகமான ஒழுங்குமுறை அமையுமா? இயற்கை தெளிவான நோக்கமும் திட்டமும் உடையது. அதை எப்படியும் வெல்ல முடியாது. இயற்கையான வேறுபாடுகளைப் போக்கவும் முடியாது என்று கூறுவதன் மூலம் சமுதாயத்தில் அவரவர் கடமைகளைச் சரியாகச் செய்யும்போதுதான் சமுதாயம் சீர்ப்படும் என்பதை உணர்த்துகிறார்.

மு.வ. வின் நாவல்கள் என்று எடுத்துக்கொண்டோமேயானால் தான் படைத்த கதை மாந்தர்கள் வாயிலாக இந்தச் சமுதாயத்தைப் பல கோணங்களில் அலசிப் பார்த்துள்ளார் என்பது தெளிவாகத் தெரிகிறது. தன்னுடைய உள்ளடக்கக் கருத்துக்களைக் கதை மாந்தர்கள் வாயிலாக எடுத்துரைக்கின்றார். அவர் படைத்து உலவ விட்ட பாத்திரங்கள் அனைத்தும் சாகாவரம் பெற்ற பேசும் பொற் சித்திரங்கள் (Varatharasan, 2004).

மு.வ. அவர்கள் இயற்கையின் அழகை இரசிப்பதில் மிகவும் ஆர்வம் காட்டுவார். அவர் மனித மனங்களை அறியும் ஆற்றல் மிகுந்தவர். இலக்கியம் மனித வாழ்கையிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது என்பது சான்றோர்களின் கருத்து. அதுபோல மு.வ. அவர்கள் தன்னுடைய நாவல்களில் அவர் தான் அன்றாட வாழ்க்கையில் சந்தித்த மனித உள்ளங்களையே தன்னுடைய நாவல்களின் கருப்பொருளாகக் கொண்டார் என்பது ஆய்வு நிலையில் தெரியவருகிறது (Varatharasan, 2004).

தனிமனிதன் இன்புற வேண்டுமானால் சமுதாயம் நன்றாக இருக்க வேண்டும். சமுதாயம் என்பது பழங்காலத்துப் பெரிய தேர் போன்றது. அதை எல்லோரும் இழுக்க வேண்டும். அப்போதுதான் எல்லோருக்கும் இன்பம் உண்டு. அது பலர் ஏறி உட்கார்ந்து கொண்டு இன்பம் பெற சிலர் இழுத்துச் செல்கின்ற தேர் அன்று. இது ஒவ்வொருவரும் தன் கடமையைக் குறைவில்லாமல் செய்து ஒவ்வொருவரும் தமக்கு உரிய பங்கைப் பெறுமாறு அமைந்திருப்பதே நல்ல சமுதாயம் ஆகும் என்கிறார் மு.வ.

நோயை உண்டாக்கியது இயற்கை. அந்நோயைத் தீர்க்கும் ஆற்றல் அதற்கு உண்டு. நல்ல காற்று, நல்ல வெளிச்சம், தட்பவெப்ப மாறுதல் இவற்றுக்கு இருக்கும் வல்லமை எந்த டாக்டருக்கும் இல்லை என்று ஆங்கிலப் புத்தகங்களில் இருக்கிறது. அதனால் தான் நம் முன்னோர்கள் காற்று, ஒளி, இவற்றை எல்லாம் தெய்வம் என்று பூசை செய்தார்கள்.

மு.வ. சங்க இலக்கியங்களில்; தான் உள்வாங்கிய சில அடிப்படைப் பண்புகளை மனிதனுக்கு அறமாக வகுக்கிறார். அப்பண்புகள் கொண்டவர்கள் நல்லவர்கள் என்றும், அல்லாதவர்களைத் தீயவர்கள் என்றும் பிரிக்கின்றார். சமுதாயக் கொடுமைகளைச் சகித்துக் கொண்டு, தம்மளவில் சீர்திருத்தம் பேசித் தம் வீட்டளவில் செயல்படுத்துவோர் சிலர். இவர்களை மிதவாதிகள் எனலாம். இவர்கள் தம் மனைவியரின் உள்ளத்தை அன்பால் வென்று தன்பால் நம்பிக்கையை வளர்த்த அவர்களது மூடப்பழக்கங்களையும், ஆடம்பர மோகத்தையும் மெல்லக் களையும் வல்லவர்கள். மேலும் அவர்கள் சமயத்தைச் சமையலறைக்குக் கொண்டு செல்வதைத் தவிர்த்து, சடங்குகளை வெல்ல முயல்பவர்கள். மு.வ. படைத்த மருதப்பன், இளங்கோ, மணி, குமரவேல் முதலானோர் மேற்கண்ட பண்புடையவர்கள் (Varatharasan, 2004).

மு.வ. வின் கருத்துப்படி இன்றைய சமுதாயம் தன்னுடைய பாதையைத்தவறிக் கரடு முரடான பாதையை நோக்கி நகர்கிறது. எந்தவித நெறியும், கொள்கையும் இல்லாதவர்கள்தான் இந்த உலகத்தில் வாழ இயலும். சட்டமும் பணமும் சேர்ந்து நீதிமன்றத்தைக் கைப்பற்றி ஒரு கட்சியாகக் கூட்டு அமைத்து உண்மைக்குப் பகையாக உள்ளன. இது களையப்பட வேண்டும் என்கிறார் (Varatharasan, 2004).

## ஆய்வுப் பயன்கள்

உலகம் திருந்த வேண்டும்; சமுதாயம் சீர்ப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கம் எல்லோருக்கும் இருந்தது. அறிஞர்களும் புலவர்களும் சமயப் பெரியோர்களும் சமுதாயத் தலைவர்களும் தங்களால் இயன்ற அளவு சமுதாயம் திருந்துவதற்காக ஒவ்வொரு வகையில் பாடுபட்டார்கள். மக்கள் மந்தையாக இல்லாமல் சமுதாயச் சுடர்களாக விளங்கப் பெருமுயற்சி செய்தார்கள். நம் முன்னோர்கள் செய்த பணியைத் தொடர்ந்து செய்துள்ளார் மு.வ. சமுதாயத்தைத் திருத்தி அமைப்பதற்கு உரிய வழிவகைகளை எண்ணிப் பார்த்து, அவற்றை ஒவ்வொரு நாவலிலும் எழுதிச் செல்கின்றார். அவருடைய நல்ல மனம் சமுதாய அமைப்பில் ஒரு புது மாறுதல் வர வேண்டும் என்று சிந்தனை செய்து பார்க்கின்றது; எதிர்காலச் சமுதாயத்திற்கு வேண்டிய கால்கோள் செய்கின்றது.

மு.வ. வின் நாவல்களை வைத்துப் பார்க்கும்போது போட்டிக்கும் ஏக்கத்துக்கும் இடம் இல்லாத, எப்படியாவது வாழவேண்டும் என்ற கவலை இல்லாமல், எப்படியும் வாழ முடியும் என்ற நம்பிக்கை தரக்கூடியதாக சமுதாயம் அமைய வேண்டும் என்பதே அவரது விருப்பம் எனத் தெரிகிறது (Varatharasan, 2004).

## முடிவுரை

மு.வ. வின் ‘அகல் விளக்கு’ நாவலைப் பொதுவான கண்ணோட்டத்தில் பார்க்கும்போது தனி மனிதனுக்கும், சமுதாயத்திற்கும் உள்ள உறவு வெளிப்படுகிறது. நன்றி மறவாத பண்பை எடுத்துரைக்கும் வகையில் வேலய்யன் என்ற பாத்திரம் அமைகிறது. உலகத்தில் காணப்படும் பலப் பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் மு.வ. அவர்கள் மிகச் சிறப்பாக குறிப்பிட்டுள்ளார். வேகமான வாழ்வு கூடாது என இளைஞர்களை எச்சரிக்கிறார். மூட நம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதை மாலன் என்ற கதாபாத்திரத்தின் மூலம் கூறுகிறார். வள்ளலார், தாயுமானவர், மாணிக்கவாசகம் ஆகியோரது கருத்துக்களைப் பல இடங்களில் இவர் மேற்கோளாகக் காட்டி இருப்பதன்மூலம் இவரது ஆன்மீகப் பற்று வெளிப்படுகிறது. இங்ஙனம் நாவலின் கதையோட்டத்திற்கேற்பப் பாத்திரங்களை அமைத்துத் தமிழுலகில் தனக்கென ஓர் முத்திரையை பதித்துள்ளார் மு.வ.

## References

Dhandayudham, R., (1973) Tharkala Tamil Ilakkiyam, Tamil Puthagalayam, Chennai, India.

Paramasivanandam, A.M., (1978) Samuthayamum Panpaadum, Madurai Kamarasar University, Madurai, India.

Thirunavukkarasu, S., (1984) Padaippu Ilakkiyam Aninthurai, New Century Book House, Chennai, India.

Varatharasan, M. (2004) Agal Vilakku, Paari niliyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License